திரு. வெ. அரங்கராசன் : தலைவரவர்களே, விவசாயிகள் போராட்டத்தின்போது பால் விநியோக நிலையங்களுக்கு வந்த பாலுக்கு ஏற்பட்ட சேதம் எவ்வளவு?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை யொட்டிக் கேட்க வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவரவர்களே, கோவை நகரில் இலட்சக்கணக்கான மக்களுக்கு பால் கிடைக்காத நெருக்கடி இருப்பதால் கோவை மாவட்டத்தில் அரசு பால் பண்ணை அமைக்க அரசிடம் உத்தேசம் ஏதாவது உண்டா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

முரசொலிக்கு அளித்துள்ள சந்தா தொகை.

*வினா எண் 46—திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு செய்தித்துறை அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்கள் எல்லாம் முரசொலி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தாவாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அந்தப் பணத்தை மீண்டும் அந்த கோயில்களுக்குத் திரும்பப்பெற ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) மற்றும் (ஆ) பதினைந்து திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு தலா ரூபாய் ஆயிரம் வீதம் சந்தா அளித்துள்ளன. இத்தொகையினை திரும்பப்பெற சம்பந்தப்பட்ட கோயில்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய பதிலிலே 15 திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு 1,000 ரூபாய் வீதம் ஆயுள் சந்தா செலுத்தியிருப்பதாகக் குறிப்பிட்டு, அதை மீண்டும் திரும்பப் பெற ஏற்பாடு செய்து வருவதாக கூறினார்கள். இந்த 1,000 ரூபாயை செலுத்த வேண்டுமென்று அன்றையதினம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் கூறியதா அல்லது அந்த கோயில் நிர்வாகம் தாமாக முன் வந்து கொடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன். அதோடு இன்னொன்று இந்த 1,000 ரூபாய்க்கு ஓரளவுக்கு பத்திரிகை

1981 ஜனவரி 27]

போட்டிருப்பார்கள். எப்படி இருந்தாலும் போட்டுவிட்ட பத்திரிக்கைகளுக்குப் பணம் செலுத்த வேண்டியது முறை என்பதை உணர்வார்களா ? அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, என்னிடத்திலே கேட்கப்பட்டிருக்கிற வினா, '' தமிழ்நாட்டிலுள்ள இந்து கோயில்கள் எல்லாம் முரசொலி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தாவாக ரூபாய் ஆயிரம் கொடுத்திருப்பது இந்த அரசுக்குத் தெரியுமா ? அந்தப் பணத்தை மீண்டும் அந்த கோயில்களுக்குத் திரும்பப்பெற ஆவன செய்யப்படுமா ? '' என்பது இந்த இரண்டுக்கும் பதில் சொல்லியிருக்கிறேன். 15 திருக்கோயில்கள் முரசொலி நாளிதழுக்கு ஆயிரம் ரூபாய் வீதம் ஆயுள் சந்தா அளித்துள்ளன : இத்தொகையினை திரும்பப் பெற சம்பந்தப்பட்ட கோயில்களால் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. ஏன் திரும்ப வசூல் செய்யப்பட வேண்டுமென்ற கட்டாயம் வருகிறது என்றால் இந்து சமய கோயில்களுடைய பணத்திலிருந்து சமய சம்பந்தமான நூல்கள் வாங்குவதற்கு மற்றும் அதுபோன்ற பிற வகைகளுக்கு மட்டுமே செலவிட வேண்டுமென்ற விதி இருக்கிற காரணத்தினால், அந்த விதிக்கு ஏற்ப அந்தந்த கோயில் அறங்காவலர்கள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதில் அரசு நேரடியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, ஆயுள் சந்தா என்ற அடிப்படையிலே 15 கோயில்கள் கொடுத்தன என்றால் அது ஆலயத்தினுடைய ஆயுளா அல்லது முரசொலி பத்திரிக்கையின் ஆயுளா ? எந்த ஆயுளை கணித்துக் கொடுத்தார்கள் ? ஆண்டவன் ஆயுளை கணிக்க ஆலயத்தைச் சேர்ந்த அறங்காவலர்களுக்கு உரிமை இல்லை என்பதை அமைச்சரவர்கள் தெரிந்திருப்பார்கள் அல்லவா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, இந்த ஆயுள் சந்தா என்ற வார்த்தை நீண்டகாலமாக பத்திரிகை உலகில் விளங்கி வரும் வார்த்தை. எந்த பத்திரிக்கையாளர்களும் பணம் சேர்ப்பதிலே இருக்கிற பல வழிகளில் இது ஒரு முறை. அது பத்திரிகை ஆயுளா அல்லது மனிதனுடைய ஆயுளா என்று யாரும் நிர்ணயிக்கவில்லை. மனிதனுடைய ஆயுளையே நிர்ணயிக்க முடியாதபோது ஆலயத்தின் ஆயுளை யாரும் நிர்ணயிக்க முடியாது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இந்த ஆயிரம் ரூபாய் சந்தாவை முரசொலிக்குக் கொடுத்ததை எந்தெந்த கோயில்களிலிருந்து கொடுத்தார்கள் ? அதைக் கோவில்

[1981 ஜனவரி 27

நிர்வாகத்தினரே முன்வந்து கொடுத்தார்களா அல்லது இவர்கள் கேட்டுக் கொடுத்தார்களா? அப்படிக் கேட்டது யார் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கிட்டப்பா அவர்களும் அந்தக் கேள்வியைத்தான் கேட்டார்கள். யார் கேட்டார்கள், யார் கொடுத்தார்கள் என்ற விவரம் எல்லாம் இல்லை. ஆலய நிர்வாகம் என்பது அந்தந்த அறங்காவலர்களைப் பொறுத்ததுதான். 15 கோயில்களிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விவரம் தான் இருக்கிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது 15 கோயில்கள் இப்படிப்பட்ட ஆயுள் சந்தா ஆயிரம் ரூபாய் வீதம் முரசொலி பத்திரிகைக்குக் கொடுத்திருப்பதாகத் தெரிவித்தார்கள். அந்த ஆயுள் சந்தா எந்த ஆண்டிலிருந்து பெறப்பட்டது? அதைப்போல இந்த ஆயுள் சந்தாவை அந்த நேரத்தில் கொடுத்த அதிகாரிகள் யார், யார்? இங்கே கோயில் விதிமுறைகளை அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த விதிமுறைகளுக்கு மாறாக அன்றைய தினம் ஆயிரம் ரூபாய் வீதம் கொடுத்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1975 ஆம் வருடத்திலேதான் இந்த ஆயுள் சந்தா தொகை செலுத்தப்பட்டுள்ளன. முறை தவறாக ஆலயத்தின் நிதி செலவழிக்கப்படுமேயானால் அதற்குப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் அறங்காவலர்கள். அவர்களிடத்திலேயிருந்துதான் அதைத் திரும்ப வசூலிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஆக இப்படி எத்தனையோ நிகழ்ச்சிகள் நடைபெற்று இருக்கின்றன. அதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு.

*வினா எண். 47—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தந்தை பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி அமைக்கப்பட்ட பெரியார் வரலாறு தொகுக்கும் குழு தனது பணியை முடித்து விட்டதா?

(ஆ) இல்லையெனில் அதற்கான காரணங்கள் என்ன?